RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 160 | ஜூன்.15, 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# எழுத்தறிவு பெறும் திட்டத்தில் தமிழகத்தில் 5 லட்சம் பேர் தேர்ச்சி

## முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

சென்னை: ஜூன்.15-

"முற்றிலும் எழுத, படிக்கத் தெரியாத 15+ வயதினர் அனைவரும் எழுத்தறிவு பெறும் திட்டத்தில் தமிழ்நாட்டில் இருந்து பயின்ற 5 லட்சம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். 100% தேர்ச்சி விழுக்காட்டோடு தமிழ்நாடு இந்தியாவிலேயே 'நம்பர் ஒன்' இடத்தைப் பிடித்துள்ளது," என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.



இதுதொடர்பாக தமிழக முதல்வர் தனது சமூகவலைதளப் பக்கத்தில், "முற்றிலும் எழுத, படிக்கத் தெரியாத 15+ வயதினர் அனைவரும் எழுத்தறிவு பெறும் திட்டத்தில் தமிழ்நாட்டில் இருந்து பயின்ற 5 லட்சம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். 100% தேர்ச்சி விழுக்காட்டோடு தமிழ்நாடு இந்தியாவிலேயே 'நம்பர் ஒன்' இடத்தைப் பிடித்துள்ளது.

அறிவொளி ஏற்றும் இச்சாதனைக்கு உழைத்த பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககப் பணியாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகள்," என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.



# தோல்வி பயத்தால் முருக பக்தர்கள் மாநாட்டுக்கு திமுக தொல்லை: நயினார் நாகேந்திரன்

திருவாரூர்: ஜூன்.15-

"திமுகவுக்கு தோல்வி பயம் ஏற்பட்டுள்ளதால், மதுரையில் பாஜக நடத்தவுள்ள முருக பக்தர்கள் மாநாட்டுக்கு தமிழக முதல்வர், அமைச்சர் சேகர்பாபு தொல்லை கொடுக்கின்றனர்." என்று பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

திருவாரூரில் உள்ள தனியார் மண்டபத்தில், ஜூன் 22ம் தேதி மதுரையில் நடைபெறும் முருக பக்தர்கள் மாநாடு குறித்து ஆலோசனைக் கூட்டம் இன்று (ஜூன் 14) நடைபெற்றது. இதற்காக திருவாரூர் வருகை தந்த பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரனுக்கு பாஜ மாவட்டத் தலைவர் விகே.செல்வம் தலைமையில் விளமல் பகுதியில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து துர்காலயா சாலை, வடக்கு வீதி, கீழவீதி,தெற்கு வீதி வழியாக இரு சக்கர வாகன அணி வகுப்பு செய்து ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்ட மண்டபத்துக்கு அழைத்து வந்தனர்.

அங்கு பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: "திமுகவுக்கு தோல்வி பயம் ஏற்பட்டுள்ளதால், பாஜக மதுரையில் முருக பக்தர்கள் மாநாடு நடத்துவதற்கு தமிழக முதல்வர், அறநிலையத்துறை அமைச்சர் எவ்வளவு தடங்கல்களை ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு தடங்கல்களை ஏற்படுத்துகிறார்கள். தமிழ் பண்பாடு, கலாச்சாரத்தை வைத்துதான் திமுக அரசியல் செய்துவருகிறது.

அந்த காலத்தில் அதெல்லாம் எடுபட்டது. தற்பொழுது அது எடுபடவில்லை. கீழடியை பொறுத்தமட்டில், ஏற்கெனவே சான்றுகள் கொடுக்கப்பட்டுள்ளது. இன்னும் சில சான்றுகள் தேவைப்படுகிறது. தமிழுக்கு தொண்டு செய்வதுபோல் காட்டிக்கொண்டு, திமுக மீண்டும் ஆட்சிக்கு வர பார்க்கிறார்கள். வரும் தேர்தலில் அது எடுபடாது. விஜய் அரசியலுக்கு வந்ததால் யாருக்கு லாப, நஷ்டம் என்பது தேர்தல் முடிந்த பின்புதான் தெரியும்.

அதே நேரத்தில் திமுகவை ஆட்சியிலிருந்து இறக்க நினைக்கின்ற அனைத்து கட்சிகளும் ஒன்று சேர்ந்து தேர்தலில் நிற்க வேண்டும். மேலும், எங்களுடைய கூட்டணியில் தேமுதிக கண்டிப்பாக வரவேண்டும் அப்போதுதான், திமுகவை தோற்கடிக்க முடியுமென நான் கூறியுள்ளேன். அதுபோல் பாமக நிறுவனர் ராமதாஸ் மற்றும் அன்புமணி ராமதாஸ் இருவரும் ஒருமித்த கருத்தோடு வரவேண்டும்." என்றார்.

வரும் சட்டமன்ற தேர்தலில், கூட்டணி கட்சி ஆட்சி அமையுமா? தனிக்கட்சி ஆட்சி அமையுமா? என்ற கேள்விக்கு, "எங்களுடைய கூட்டணி கட்சிகளின் ஆட்சி நடைபெறும். அதேநேரத்தில், அதிமுக பழனிசாமிதான் முதல்வர்." என்று அவர் கூறினார்.

# பாமக எம்எல்ஏக்களுக்கு வலை..? போட்டி போட்டு ஆட்களை இழுக்கும் திமுக தவாக!

சென்னை, ஜூன்.15-

பாமகவில் தந்தைக்கும் மகனுக்கும் இடையில் நடக்கும் அதிகார யுத்தம் நாளுக்கு நாள் வீரியமாகிக் கொண்டே போகிறது. ராமதாஸையும் அன்புமணியையும் சமாதானப்படுத்த பாஜக தரப்பில் ஆடிட்டர் குருமூர்த்தி மூலமாக எடுக்கப்பட்ட முயற்சிகளும் பலனளிக்காத நிலையில், முக்கிய நிர்வாகிகள் உள்பட 45 பேரை பொறுப்புகளில் இருந்து நீக்கினார் ராமதாஸ். அவர்களில் சிலரை மீண்டும் பொறுப்பில் அமர்த்தி அதிரடி காட்டினார் அன்புமணி. கட்சிக்குள் நடக்கும் இந்த ஏட்டிக்குப் போட்டிகளை எல்லாம் பார்த்துவிட்டு, கீழ்மட்ட நிர்வாகிகள் பலரும் மாற்றுக் கட்சி முகாம்களுக்கு தூதுவிட தொடங்கிவிட்டதாகச் சொல்கிறார்கள்.

பாமகவில் அன்புமணியின் ஆதிக்கத்தைப் பிடிக்காமல் தான் பண்ருட்டி வேல்முருகன் உள்ளிட்ட செல்வாக்கான மனிதர்கள் கட்சியை விட்டு விலகினார்கள். இதில், வேல்முருகன் தமிழக வாழ்வுரிமை கட்சியைத் தொடங்கி தற்போது திமுக கூட்டணியில் எம்எல்ஏவாகவும் இருக்கிறார். தந்தைக்கும் மகனுக்கும் மோதல் வெடித்த சமயத்தில், கட்சியை பலப்படுத்துவதற்காக வேல்முருகன், காடுவெட்டி குருவின் மகன் உள்ளிட்டவர்களை மீண்டும் பாமகவுக்குள் கொண்டுவர ராமதாஸ் தரப்பில் ஒரு மூவ் நடந்ததாகச் சொல்கிறார்கள்.





இந்த நிலையில் அண்மையில், வேல்முருகனின் சகோதரரும் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் ஒழுங்கு நடவடிக்கைக் குழு தலைவருமான திருமால் வளவன் தைலாபுரம் தோட்டத்தில் ராமதாஸை சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்புக்குப் பிறகு, "நான் வந்துவிட்டேன் என்பதால் சீக்கிரமே அன்புமணியும் அய்யாவை சந்திக்க வந்து விடுவார்" என்று சொன்னார் திருமால்வளவன்.

அதுபோலவே, ராமதாஸை சந்திக்க தைலாபுரத்துக்கு ஓடோடி வந்தார் அன்புமணி. ஆனாலும் அப்போது ராமதாஸும் அன்புமணியும் முகம்கொடுத்து பேசிக்கொள்ளவில்லை என்கிறார்கள். அதேசமயம், வேல்முருகன் உள்ளிட்டவர்கள் மீண்டும் பாமகவுக்குள் வந்துவிடுவார்களோ என்ற அச்சத்தில் தான் அன்புமணி தைலாபுரத்துக்கு வந்து போனதாகச் சொல்கிறார்கள். இந்த நிலையில், பாமகவில் தற்போது நிலவும் நிச்சயமற்ற சூழலைப் பயன்படுத்தி பிறகட்சிகள் பாமகவின் கீழ்மட்ட நிர்வாகிகளுக்கு வலைவீச ஆரம்பித்திருக்கின்றன.

அதேசமயம் சமுதாய ரீதியாக சிந்திக்கும் பாமகவினர் பலரும் வேல்முருகன் அலுவலகக் கதவைத் தட்டி வருவதாக ஒரு செய்தி தடதடக்கிறது. இதுகுறித்து தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகனிடம் கேட்டதற்கு, "பாமகவில் இருந்து தாமாக வருவோரை வரவேற்கிறோம். தென்மாவட்டங்களில் இருந்து பலர் தவாகவில் இணைந்துள்ளனர். தவாகவை பாமக உடன் இணைக்கப் போவதாக செய்தி பரப்புகிறார்கள்.

ஆனால், அப்படியான திட்டம் எதுவும் எங்களுக்கு இல்லை. ஏனென்றால் நாங்கள் பாமகவை விட்டு வெகுதூரம் வந்துவிட்டோம். மாநிலம் முழுக்க கட்சிக்கு நிர்வாகிகளை நியமிக்கப்பட்டு எங்கள் கட்சியானது மாநிலக் கட்சியாக திகழ்ந்து வருகிறது. இடதுசாரி சிந்தனையாளர்கள் பலர் எங்கள் கட்சியில் இணைந்து வருகின்றனர். அந்த வகையில், எங்களுடன் இணைந்து மக்கள் பணியாற்ற வருவோரை இன்முகத்தோடு வரவேற்கிறோம்" என்றார்.

இதனிடையே பாமக எம்எல்ஏக்கள் இருவருக்கு திமுக குறிவைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதில் ஒருவரை அழைத்து வரும் பொறுப்பு சேலம் எம்பியான டி.எம்.செல்வகணபதி வசம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் பாமக வட்டாரத்திலேயே கிசுகிசுக்கிறார்கள்.

பாமகவினர் மாற்று முகாம்களை நோக்கி நகர ஆரம்பித்திருப்பது குறித்து பாமகவின் நிர்வாகக் குழு உறுப்பினரான தர்மலிங்கத்திடம் கேட்டதற்கு, "தந்தைக்கும் மகனுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் மனத்தாங்கலை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, கட்சிக்குத் துரோகம் செய்தவர்கள் ஆறுதல் கூற வருகிறோம் என்ற பெயரில் வந்து பார்ப்பது பாமக தொண்டர்கள் மத்தியில் ஆதங்கத்துடன் கூடிய அதிருப்தியை ஏற்படுத்தி இருப்பது உண்மை தான்.

இருந்தாலும் விரைவில் இருவரும் கலந்துபேசி நல்ல முடிவை எட்டுவார்கள் என்ற நம்பிக்கையில் எங்களைப் போன்றவர்கள் அமைதியாக இருக்கிறோம்" என்றார். ஒரு காலத்தில் வெயிட்டான மத்திய அமைச்சர்களையும் தன்னகத்தே வைத்திருந்த பாமகவுக்கா இப்படியொரு நிலை வரவேண்டும்?

# 19 மாவட்டங்களில் கட்டப்பட்டு வரும் அரசு மருத்துவமனைகளை முதல்வர் விரைவில் திறந்துவைப்பார்: அமைச்சர் மா.சுப்பிரமணியன்

சென்னை: ஜூன்.15-

ரூ.1,018 கோடியில் ரூ.19 மாவட்டங்களில் 25 இடங்களில் கட்டப்பட்டு வரும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளை முதல்வர் விரைவில் திறந்து வைக்கவுள்ளார் என்று சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சென்னையில் நேற்று நடந்த மகப்பேறு மயக்கவியல் தர மேம்பாட்டிற்கான மருத்துவ பயிலரங்கத்தை சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார். தொடர்ந்து, மயக்கவியல் துறையில் சிறப்பாக பணியாற்றிய மருத்துவர்களுக்கு விருதுகள் வழங்கினார்.

சுகாதாரத்துறை செயலாளர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் அருண் தம்புராஜ், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் ராஜமூர்த்தி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை கூடுதல் இயக்குநர் சோமசுந்தரம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி கூடுதல் இயக்குநர் தேரணிராஜன் உள்ளிட்டோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பின்னர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மகப்பேறு காலங்களில் தாய்மார்கள் மரணங்களை குறைக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்படுகிறது. ஒரு லட்சம் பிறப்புகளுக்கு தாய்மார்களின் இறப்பு விகிதம் 39.6 ஆகவும், குழந்தை மரண விகிதம் 1,000 பிறப்புகளுக்கு 7.4 ஆகவும் குறைந்துள்ளது. மகப்பேறு இறப்பு விகிதம் மற்றும் சிசு இறப்பு மரண விகிதங்களை மேலும் குறைக்க மருத்துவர்களுக்கான பயிலரங்கங்கள், அவர்களுக்கான சிறப்பு வகுப்புகள் ஏற்கெனவே நடத்தப்பட்டது.

அதேபோல் குழந்தைகள் நல மருத்துவர்களுக்கான தனியாக பயிலரங்கள் பல்வேறு அமர்வுகளின் மூலம் நடத்தப்பட்டது. தொடர்ந்து இன்றைக்கு மகப்பேறு மருத்துவத்துக்கு மிகப்பெரிய தொடர்புடைய மயக்கவியல் துறையில் 129 மருத்துவர்கள் பங்கேற்றிருக்கின்ற பயிலரங்கம் தற்போது நடக்கிறது. அடுத்தடுத்த ஆண்டுகளில் மகப்பேறு இறப்பு விகிதமும், குழந்தைகளுக்கான இறப்பு விகிதமும் வெகுவாக குறைந்து பூஜ்ஜிய நிலைக்கு செல்லும் என்று கருதுகிறோம்.

கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் பல்வேறு மருத்துவ கட்டமைப்புகள் தொடர்ந்து தொடங்கி வைக்கப்பட்டு வருகிறது. ஒரே ஆண்டில் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை தொடங்கி வைத்தார். அம்மருத்துவமனைகளால் மக்கள் பயன் பெற்று வருகிறார்கள். 208 மருத்துவமனைகளுக்கு பல்வேறு மாவட்டங்களில் இடப்பற்றாக்குறை, இடம் கண்டறிவதில் ஏற்பட்ட காலதாமத்தினால் அந்த பணிகளும் முடிவுற்று 208 மருத்துவமனைகள் தற்போது திறக்கும் நிலையில் உள்ளது.

அதற்கான மருத்துவ பணியாளர்களை அந்தந்த மாவட்டத்தில் உள்ள மாவட்ட சுகாதார நலவாழ்வு சங்கம் மூலமாக நிரப்பப்பட்டு வருகிறது. 50 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதிதாக அறிவித்து, அதற்கும் பணியாளர்களை நியமிக்கும் பணிகள் இன்னும் 10 நாட்களுக்குள் முடிவுறும் நிலையில் இருக்கிறது.

இப்பணிகள் முடிவடைந்தவுடன் 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் மற்றும் 50 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களையும் முதல்வர் பயன்பாட்டிற்காக கொண்டு வருவார். தமிழகத்தில் ரூ.1,018 கோடியில் 19 மாவட்டங்களில் 25 இடங்களில் மாவட்ட தலைமை மருத்துவமனைகள் கட்டும் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது. இம்மருத்துவமனைகளும் விரைவில் முதல்வரால் திறந்து வைக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஜேஇஇ தேர்வில் வெற்றி பெற்றதால் வீடு ஒதுக்கீட்டு ஆணை: முதல்வர் ஸ்டாலினுக்கு பழங்குடியின மாணவி நன்றி

சென்னை: ஜூன்.15-

பொறியியல் படிப்புக்கான நுழைவுத் தேர்வில் (ஜேஇஇ) வென்றமைக்காக வீடு ஒதுக்கீட்டு ஆணை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு, பழங்குடியின மாணவி நன்றி தெரிவித்துள்ளார். சேலம் மாவட்டம் கல்வராயன்மலையைச் சேர்ந்த கருமந்துறை அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளியில் பயின்ற ஆ.ராஜேஸ்வரி என்ற பழங்குடியின மாணவி, அண்மையில் நடைபெற்ற ஜேஇஇ தேர்வில் அகில இந்திய அளவில் 417வது இடத்தில் தேர்ச்சி பெற்று, சென்னை ஐஐடியில் பயில தகுதி பெற்றுள்ளார்.

ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த இம்மாணவியின் தந்தை 2023ல் இறந்துவிட்டார். தாயார் கவிதா, அக்கா ஜெகதீஸ்வரி, அண்ணன் கணேஷ் ஆகியோருடன் கருமந்துறை மலைப் பகுதியில் வசித்து வரும் மாணவி ஆ.ராஜேஸ்வரி, பழங்குடியின நலத் துறையின் சிறப்பு வகுப்புகளிலும், ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் செயல்பட்டு வரும் அரசு பயிற்சி மையத்திலும் சேர்ந்து உயர்கல்வி நுழைவுத் தேர்விற்கு தயாரானது குறிப்பிடத்தக்கது. மேலும், ஜேஇஇ அட்வான்ஸ்டு கவுன்சிலிங்கிற்காக குமிழி ஏகலைவா உண்டு உறைவிடமாதிரி மேல்நிலைப் பள்ளியில், பழங்குடியினர் நலத்துறை, வாசுகி அறக்கட்டளை மூலம் நடத்தப்படும் உயர்கல்விக்கான பயிற்சியும் பெற்று வருகிறார். இவர் சென்னை ஐஐடில் ஏரோஸ்பேஸ் இன்ஜினீயரிங் பயிலவும் விருப்பம் தெரிவித்துள்ளார். இந்நிலையில், கடந்த 12ம்தேதி சேலம் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், மாணவி ஆ.ராஜேஸ்வரியை நேரில் அழைத்துப் பாராட்டி, பழங்குடியினர் நலத் துறையின் தொல்குடித் திட்டத்தின் கீழ் ரூ.5.73 லட்சம் மதிப்பிலான வீடு ஒதுக்கீடு செய்து, அதற்கான ஆணையை வழங்கினார். மேலும், ரூ.70,000 மதிப்பிலான மடிக்கணினியையும் வழங்கினார்.

இதுகுறித்து மாணவி ராஜேஸ்வரி கூறும்போது, "முதல்வர் ஸ்டாலின் என்னை நேரில் பாராட்டி மடிக்கணினி வழங்கினார். மேலும், வீடு கட்டிக் கொடுப்பதற்கான ஆணையும் வழங்கினார். அவருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

# காவல் நிலையத்தையே காக்க முடியாத திமுக ஆட்சி எப்படி மக்களைக் காக்கும்? : இபிஎஸ் கண்டனம்

சென்னை: ஜூன்.15-

"காவல் நிலையத்தையே காக்க முடியாத இந்த திமுக ஆட்சி, எப்படி மக்களைக் காக்கும்? வாய்ப்பே இல்லை. வி.சத்திரப்பட்டி காவல் நிலையத் தாக்குதலில் ஈடுபட்டோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசை வலியுறுத்துகிறேன்" என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "திமுக ஆட்சியில் காவல் நிலையத்துக்கே பாதுகாப்பு இல்லை. காவல் நிலையத்தையே காக்க முடியாத முதல்வர், தமிழ்நாட்டு மக்களை எப்படி காக்கப் போகிறார்? மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே உள்ள வி.சத்திரப்பட்டி காவல் நிலையத்தில் நேற்று புகுந்த மர்மநபர்கள், காவல் நிலையத்தைத் தாக்கி, சூறையாடியதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.



இதனையடுத்து, எனது அறிவுறுத்தலின்படி, சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி. உதயகுமார், அக்காவல் நிலையத்தை பார்வையிடச் சென்றபோது, அவர் காவல்துறையால் தடுத்து நிறுத்தப்பட்டு, கைது செய்யப்பட்டுள்ளதற்கு எனது கடும் கண்டனம். ஸ்டாலின் ஆட்சியில் மக்களுக்கு பாதுகாப்பு இல்லை. மக்களைக் காக்க வேண்டிய காவல்துறைக்கு பாதுகாப்பு இல்லை. தற்போது உச்சத்தின் உச்சமாக காவல் நிலையத்துக்கே பாதுகாப்பு இல்லை.

முதல்வர் ஸ்டாலினின் நான்காண்டு ஆட்சியின் சாதனைப் பட்டியலில் முதலில் சேர்க்க வேண்டிய சாதனை இது தான். உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் காவல் நிலையம் தாக்குதலுக்கு உள்ளாவது உங்களுக்கு வெட்கமாக இல்லையா முதல்வரே? காவல் நிலையத்தையே காக்க முடியாத இந்த திமுக ஆட்சி, எப்படி மக்களைக் காக்கும்? வாய்ப்பே இல்லை. வி.சத்திரப்பட்டி காவல் நிலையத் தாக்குதலில் ஈடுபட்டோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என திமுக அரசை வலியுறுத்துகிறேன்.

எப்போதும் நான் சொல்வதை மீண்டும் தமிழ்நாட்டு மக்களுக்கு ஒருமுறை சொல்லிக்கொள்ள விழைகிறேன், மக்களே, இந்த ஸ்டாலின் மாடல் திமுக ஆட்சி ஒழியும் வரை நமக்கு நாம் தான் பாதுகாப்பு," என்று அவர் கூறியுள்ளார்.



■ செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி புனித தோமையர் மலை ஒன்றியம் இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் கிரிக்கெட் போட்டி ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர். ஐயப்பன் ஏற்பாட்டில் திரிசூலம் விளையாட்டுத் திடலில் நடைபெற்றது ஒன்றிய கழகச் செயலாளர் ஜி.கே. ரவி தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை ஆகியோர் கலந்து கொண்டுபோட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு கலைஞர் கோப்பை ரொக்கமாக முதல் பரிசு ரூ.20 ஆயிரம், இரண்டாம் பரிசு ரூ15 ஆயிரம், மூன்றாம் பரிசு ரூ10 ஆயிரம் ஆகியவற்றை வழங்கி சிறப்பித்தார்கள் உடன் வட்டக் கழக செயலாளர் பிரான்சிஸ் பால் ஒன்றிய கழகம் நிர்வாகிகள் திரிசூலம் ஊராட்சி கழக நிர்வாகிகள் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் இளைஞர் அணி நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்




■ உலக குருதி கொடையாளர் தினத்தையொட்டி, தூத்துக்குடி மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில் இரத்ததானம் செய்வதை ஊக்குவிக்கும் விதமாக நடை பெற்ற விழிப்புணர்வு பேரணியை மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் (பயிற்சி) திருபுவனேஷ்ராம், இ.ஆ.ப, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.சிவக்குமார், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை துணை முதல்வர் திருமதி கலைவாணி, உறைவிட மருத்துவ அலுவலர் திரு. சைலஸ் ஜெபமணி, இரத்தவங்கி மருத்துவ அலுவலர் திருமதி சாந்தி, செவிலியர் கண்காணிப்பாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் சிவகங்கை மாவட்டத்திற்கு வருகின்ற 17.06.2025 அன்று வருகைதரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தொடரந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித்.இ.ஆ.ப., அவர்கள் அனைத்து துறை அரசு அலுவலர்களுடன் முன்னேற்பாடு பணிகள் தொடர்பான கலந்தாய்வு கூட்டம் மேற்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள், தேவகோட்டை சார் ஆட்சியர் திரு.ஆயுஷ் வெங்கட் வட்ஸ்,இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.சுகுமார் அவர்கள் உட்பட அனைத்து துறை முதன்மை அலுவலர்கள் உள்ளனர்.

# பொது விநியோகத் திட்ட சிறப்பு மக்கள் குறைதீர்க்கும் முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு

கன்னியாகுமரி, ஜூன்.15-

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்ட வழங்கல் அலுவலகத்தில் பொது விநியோகத் திட்ட சிறப்பு மக்கள் குறைதீர்க்கும் முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட ஆறு வட்டங்களில் உள்ள வட்ட வழங்கல் அலுவலகங்களில் பொது விநியோகத் திட்ட செயல்பாட்டில் காணப்படும் குறைபாடுகளை களைவதற்கும் மக்களின் குறைபாடுகளை கேட்டு உடனுக்குடன் அவற்றை நிவர்த்தி செய்வதற்கும் சிறப்பு மக்கள் குறைதீர் முகாம் இன்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து



கல்குளம் வட்ட வழங்கல் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற முகாம்களில் இந்த முகாமில் குடும்ப அட்டையில் தொலைபேசி எண் பதிவேற்றம் செய்தல், பெயர் சேர்த்தல் மற்றும் நீக்குதல், முகவரி மாற்றம் செய்தல், இறந்து போன நபர்களின் பெயர்கள் நீக்கம் செய்து புகைப்படம் மாற்றம் செய்தல், குடும்ப அட்டைகளில் உள்ள பிழைகள் திருத்தம் செய்தல், குடும்ப தலைவர் மாற்றம் மற்றும் புகைப்படம் பதிவேற்றம் செய்தல், நகல் குடும்ப அட்டை வழங்குதல், நியாய விலை கடைக்கு நடந்து சென்று பொருட்கள் வாங்க முடியாத முதியவர்கள் மற்றும் மாற்றுதிறனாளிகள் மட்டும் உள்ள குடும்ப அட்டைகளுக்கு ரேசன் பொருட்கள் தடங்கல் இன்றி பெறும் வகையில் அங்கீகார சான்று வழங்குதல், குடும்ப அட்டைகள் வகைபாடு மாற்றம் மற்றும் ரேசன் பொருட்கள் தொடர்பான குறைகள் உள்ளிட்ட பொதுமக்களின் பலவகையான கோரிக்கைகள் உடனடியாக தீர்வு செய்ய இம்முகாமில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

இம்முகாமில் பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்ததோடு அவர்களிடமிருந்து கோரிக்கை மனுக்களையும் பெற்றுக் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வட்டவழங்கல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

தொடர்ந்து நடைபெற்ற ஆய்வின்போது பொதுமக்கள் தங்கள் கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேறியதால் மாவட்ட ஆட்சியருக்கு நன்றி தெரிவித்தனர்.

நடைபெற்ற ஆய்வில் பத்மநாபபுரம் சார் ஆட்சியர் திரு.வினய்குமார் மீனா, இ.ஆ.ப., கல்குளம் வட்டாட்சியர் ஜாண் ஹெனி, வட்ட வழங்கல் அலுவலர், துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# அகமதாபாத் விமான விபத்து: பலி எண்ணிக்கை 270 ஆக அதிகரிப்பு


அகமதாபாத், ஜூன்.15-

அகமதாபாத் ஏர் இந்தியா விமான விபத்து நடந்த இடத்தில் இருந்து, மேலும் ஒரு உடல் விமானத்தின் வால் பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன் மூலம் இந்த விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 270 ஆக அதிகரித்துள்ளது.

பிஜி மருத்துவக் கல்லூரியில், இளநிலை மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் தவால் கமேட்டி இன்று (சனிக்கிழமை) செய்தியாளர்களை சந்திக்கையில், "இன்றைய நிலவரப்படி விமான விபத்துப் பகுதியிலிருந்து 270 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன." என்று தெரிவித்தார்.

மேலும், விமான விபத்து நடந்த இடத்தில் தடயங்களைத் தேடும் பணியில் தடயவியல் நிபுணர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நேற்று முன்தினம் (ஜூன் 12) ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளானது சர்வதேச அளவில்



பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதில் பயணித்த 242 பேரில் 241 பேர் உயிரிழந்தனர். ஒருவர் மட்டுமே உயிர்பிழைத்தார். மருத்துவக் கல்லூரி விடுதி கட்டடத்தின் மீது அந்த விமானம் வெடித்துச் சிதறி தீப்பிடித்தது.

இந்த பயங்கரமான விபத்தில் விமானத்தில் இருந்த 241 பேரும், மருத்துவக்கல்லூரி விடுதிக்கட்டிடத்தில் இருந்த மருத்துவ மாணவர்கள் மற்றும் அந்த மருத்துவக்கல்லூரி வளாகத்தில் இருந்தவர்கள் உட்பட 270 பேர் உயிரிழந்ததாக தகவல் கூறுகிறது.

இந்நிலையில், உயிரிழந்தவர்களின் உடல்களை அடையாளம் காணும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. உறவினர்களிடமிருந்து டிஎன்ஏ மாதிரிகள் சேகரிக்கப்படுகிறது. ஏர் இந்தியா விமான விபத்து நடந்த இடத்தில், மீட்புப் பணிகளுக்காக NSG குழு நிறுத்தப்பட்டுள்ளது.

விமான விபத்து புலனாய்வுப் பணியகம் (AAIB), சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (DGCA), அகமதாபாத் குற்றப்பிரிவு மற்றும் உள்ளூர் காவல்துறை உட்பட பலரும் விபத்து குறித்து பல கட்ட விசாரணையை நடத்தி வருகின்றன.

தேசிய புலனாய்வு அமைப்பின் (NIA) அதிகாரிகளும் வெள்ளிக்கிழமை சம்பவ இடத்தைப் பார்வையிட்டனர்.

இந்நிலையில், விமான விபத்து நடந்த இடத்தில் இருந்து, மேலும் ஒரு உடல் விமானத்தின் வால் பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதையடுத்து, பலி எண்ணிக்கை 270 ஆக அதிகரித்துள்ளது.

மீட்கப்பட்ட சடலங்கள் குறித்து அதிகாரிகள் பேசும் போது, விபத்துக்குள்ளான இடத்தில் இருந்து மீட்கப்பட்ட எச்சங்களின் டிஎன்ஏ பகுப்பாய்வு கணிசமாக துரிதப்படுத்தப்படும் என்றும், மூன்று நாட்களுக்குள் அவற்றை அடையாளம் காணும் பணிகள் முடிக்கப்படும் என்றும் தெரிவித்தனர்.



■ இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் முன்னாள் படைவீரர்கள் நலத்துறையின் மூலம் நடைபெற்ற சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் முன்னாள் படைவீரர்களிடம் மனுக்கள் பெற்று, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

# தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையில் ஒரு சிக்கலான அறுவைசிகிச்சையில் 45 வயதான பெண்ணின் உடலிலிருந்து 27 கிலோ எடையுள்ள நார்த்திசுக் கட்டி அகற்றம்

தஞ்சாவூர், ஜூன்.15-

டெல்டா பிராந்தியத்தின் பிரபல மருத்துவமனையான மீனாட்சி மருத்துவமனை தஞ்சாவூர், 45 வயதான பெண்ணின் கர்ப்பப்பையிலிருந்து சினைப்பை மற்றும் கர்ப்பப்பையோடு 27 கிகி எடை கொண்ட நார்த்திசு திரளை அகற்றுவதற்கு ஒரு சிக்கலான அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்திருக்கிறது. தீங்கற்ற கழலைக் கட்டியிலிருந்து அழுத்தத்திற்கு இந்த உறுப்புகள் உட்படுத்தப்பட்டிருந்தன. இந்த வெற்றிகர சிகிச்சை,

நார்த்திசு திரள் என்பது கர்ப்பப்பையிலிருந்து உருவாகிற, ஒரு புற்றுநோய் அல்லாத திசு வளர்ச்சியாகும்; தசை மற்றும் நார்த்திசுக்களால் உருவானதாக இந்த கழலைக் கட்டி இருக்கும். உண்மையிலேயே மிக அரிதான நேர்வாகும்; 2.5 இலட்சம் நபர்களில் ஒரே ஒருவருக்கு மட்டுமே இந்தளவிற்கு தசைத்திசுக்கட்டிகளின் வளர்ச்சி இருக்கும். இப்பெண்ணிற்கு செய்யப்பட்ட இந்த அறுவைசிகிச்சைக்கு முன்பு விரிவான திட்டமிடலும், மற்றும் அதற்கு பிறகு துல்லியமான பராமரிப்பும் அவசியமாக இருந்தது..

இரண்டு மகள்களுக்கு தாயான இப்பெண் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவரது அடிவயிற்றுப் பகுதியில் ஒரு சிறிய வீக்கம் உருவாகியிருப்பதை கவனித்தார். இந்த தசைத்திரளானது படிப்படியாக வளர்ச்சியடைந்து வயிற்றுப் பகுதியில் பிறருக்கு தெரியக்கூடிய அளவிற்கு பெரிய புடைப்பாக மாறியது. சௌகரியம் இருந்தபோதிலும், மருத்துவ உதவியை நாடுவதை இப்பெண்மணி தவிர்த்து விட்டார். அவளது கணவர் வெளிநாட்டில் பணியாற்றி வருவதால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவது தனது குழந்தைகளை ஆதரவற்றவர்களாக ஆக்கிவிடும் என்ற அச்சமே இதற்கு காரணமாகும். எனினும், சமீப வாரங்களில் இந்த தசைத்திரளானது மிகப்பெரிதாக வளர்ச்சியடைந்ததால் சுவாசிப்பதே அதிக சிரமமானதாக இவருக்கு மாறிவிட்டது. கடும் சிரமம் இல்லாமல் அமரவோ அல்லது படுக்கவோ



இயலாத நிலை ஏற்பட்டதால் மருத்துவ சிகிச்சையை பெற வேண்டிய சூழலுக்கு அவர் நிர்பந்திக்கப்பட்டார்.

இந்த திசுத்திரள் வளர்ச்சியானது, இதயம் மற்றும் நுரையீரல்கள் உட்பட பல உள்ளார்ந்த உறுப்புகளின் அமைவிடத்தையும், இயக்கத்தையும் பாதிக்கும் சாத்தியத்தைக் கொண்டிருந்ததால், இப்பெண்ணின் மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சை செயல்முறைகளின் மதிப்பாய்வில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த மருத்துவர்களின் குழு ஒருங்கிணைந்து ஈடுபட்டது. பெண் பாலுறுப்பியல் துறையின் முதுநிலை நிபுணரான டாக்டர் ஸி. நிர்மலாவின் தலைமையில் இயங்கிய அறுவைசிகிச்சை குழுவில் மயக்கமருந்தியல் துறையின் முதுநிலை நிபுணர்கள் டாக்டர். நி. அரிமாணிக்கம் மற்றும் டாக்டர். வினோதா தேவி ஆகியோர் முக்கிய பங்களிப்பை வழங்கினர். அறுவைசிகிச்சைக்குப் பிந்தைய பராமரிப்பை டாக்டர். செந்தில்குமார் தலைமையிலான தீவிர சிகிச்சை பிரிவு குழு வழங்கியது.

மீனாட்சி மருத்துவமனை தஞ்சாவூரின் மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவத் துறையின் முதுநிலை நிபுணரான டாக்டர். நிர்மலா இந்த சிகிச்சை குறித்து கூறியதாவது: "இந்த பெண் எங்களிடம் சிகிச்சைக்காக வந்தபோது கடுமையான சுவாச சிரமம், மலச்சிக்கல் மற்றும் அமர்வது, நிற்பது அல்லது படுத்திருப்பது போன்ற அடிப்படையான இயக்கச் செயல்பாடுகளில் பிரச்சனை உட்பட பல்வேறு மருத்துவச் சிக்கல்களை கொண்டிருந்தார். சிடி மற்றும் எம்ஆர்ஐ ஸ்கேன் சோதனைகளையும் மற்றும் கர்ப்பப்பை புற்றுக் கட்டி குறிப்பான்களை கண்டறிவதற்கான சோதனைகளையும் நாங்கள் இப்பெண்ணிற்கு மேற்கொண்டோம். புற்றுநோய் குறிப்பான்கள் எதிர்மறையாக இருந்த போதிலும் இந்த திசுத்திரளின் அளவு மற்றும் அதிவேக வளர்ச் சியின் காரணமாக புற்று நோய் இல்லை என்று எங்களால் ஒதுக்கித்தள்ள இயலவில்லை. இத்தகைய தீவிர வளர்ச்சி என்பது தீங்கற்ற ஒரு கழலைக்கட்டியில் காணப் படுவது வழக்கத்திற்கு மாறான தாகும். இந்த கவலைகளை கருத்தில் கொண்டு, ஸ்டேஜிங் லேபரோ டோமிஜ மேற்கொண்ட நாங்கள் கர்ப்பப்பை, சினைப்பைகள், இடுப்பு நிணநீர் முடிச்சுகள் மற்றும் உதரமடிப்பு ஆகிய உறுப்புகளோடு சேர்த்து நார்த்திசு திரளையும் அகற்றினோம். அதிர்ஷ்டவசமாக, செய்யப்பட்ட திசு ஆய்வு (பயாப்சி) முடிவுகள் இந்த வளர்ச்சியானது, புற்றுநோய் சாராத ஒரு மிகப்பெரிய நார்த்திசு திரள் என்பதை உறுதி செய்தன."

அறுவைசிகிச்சைக்கு முந்தைய மற்றும் பிந்தைய தயாரிப்பு மற்றும் பராமரிப்பு குறித்து பேசிய டாக்டர். நிர்மலா, "பெரிய அளவிலான இந்த நார்த்திசுக்கட்டி, இதயம் மற்றும் நுரையீரல்கள் உட்பட பல முக்கியமான உள்ளார்ந்த உறுப்புகளை இடம்பெயரச் செய்து அவைகளின் செயல்பாட்டை பாதித்திருந்ததால் ஒரு சிக்கலான அறுவை சிகிச்சையாக இது இருக்கும் என்பதை நாங்கள் எதிர்பார்த்தோம். இந்த அறுவைசிகிச்சைக்கு நோயாளியை தயார் செய்வதற்காக, அறுவை சிகிச்சைக்கு பிந்தைய காலகட்டத்தில் சிறப்பான மீட்சிக்கு உதவ மூச்சுப் பயிற்சிகளை மேற்கொள்ள நாங்கள் அப்பெண்ணிற்கு பயிற்சியளித்தோம். நார்த்திசுக்கட்டி அகற்றப்பட்டவுடன் அந்த நார்க்கட்டியால் இதுவரை இருந்த மேல்நோக்கிய அழுத்தத்திலிருந்து திடீரென நுரையீரல்கள் விடுவிக்கப்படும் என்பதால் அதற்கு நுரையீரல்கள் எப்படி பதில்வினையாற்றும் என்பது எங்களுக்கு இருந்த கவலைகளுள் ஒன்றாகும். அதிர்ஷ்டவசமாக எவ்வித சிக்கல்களும் இல்லாமல் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நிறைவேறியது. இந்த திசுத்திரளுடன் இணைக்கப்பட்டிருந்த விரிவான இரத்தநாள வலைப்பின்னலின் காரணமாக, கணிசமான அளவுக்கு இரத்த இழப்பு இருந்தது" என்று கூறினார்.

"அறுவைசிகிச்சைக்கு பிறகு, அவைகளின் புதிய நிலைக்கு தங்களை தகவமைத்துக் கொள்ள நுரையீரல்களுக்கு காலஅவகாசம் தேவைப்பட்டதால் செயற்கை சுவாசம் வழங்கும் வென்டிலேட்டர்லிருந்து நோயாளியை உடனடியாக அகற்ற இயலவில்லை. இதன் காரணமாக சிகிச்சை செயல்முறைக்கு பிறகு ஒருநாள் வரை வென்டிலேட்டர் உடன் இணைக்கப்பட்ட நிலையில் இப்பெண் இருக்க வேண்டியிருந்தது. இந்த திசுக்கட்டியானது சிறிதாக இருக்கும்போதே மருத்துவ சிகிச்சையை பெற இந்நோயாளி வந்திருப்பாரானால் இதுபோன்ற பல சவால்களை தவிர்த்திருக்க முடியும்" என்று அவர் மேலும் கூறினார்.

இப்பத்திரிகையாளர் சந்திப்பின்போது தஞ்சை மீனாட்சி மருத்துவமனையின் துணை மருத்துவ கண்காணிப்பாளர் மருத்துவர்.வி.பிரவீன், மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவ ஆலோசகர் டாக்டர். நுஜாத் ஜெபா மற்றும் மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவ இணை ஆலோசகர் டாக்டர். ஸ்டெஃபி கிரண் பாண்டியன் ஆகியோர் உடனிருந்தனர்

மாலை தந்தி

ஞாயிற்றுக்கிழமை 15.6.2025



# நீதிமன்றத்துக்கு வெளியே நீதிபதி வந்து குற்றம் சுமத்தப்பட்டவர்களிடம் விசாரணை

ஹைதராபாத், ஜூன்.15-

நீதிமன்றத்துக்கு வெளியே வந்து, குற்றம் சாட்டப்பட்ட வயதான தம்பதியினரிடம் நீதிபதியே நேரில் விசாரணை நடத்தி தீர்ப்பளித்துள்ளார். நீதிபதியின் இந்த மனிதாபிமான செயல் தெலங்கானா மற்றும் ஆந்திராவில் சமூக வலைத்தளங்களில் வைரல் ஆகி வருகிறது.

தெலங்கானா மாநிலம், நிஜாமாபாத் மாவட்டம், ராமகூர் கிராமத்தை சேர்ந்தவர் கங்காராம் (75). இவரது மனைவி சோமம்மாள் (69). இந்த வயதான தம்பதியினர் மீது மருமகள் வரதட்சணை கொடுமை வழக்கு போட்டிருந்தார். இவ்வழக்கு நிஜாமாபாத் மாவட்டம், போதன் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. சரிவர நடக்க கூட முடியாத இந்த வயதான தம்பதியினர், ஒவ்வொரு வாய்தாவிற்கும் கஷ்டப்பட்டு நீதிமன்றத்தில் தவறாமல் ஆஜராயினர்.

இவ்வழக்கை நீதிபதி சாய் சிவா விசாரித்து வந்தார். இந்நிலையில், கடந்த 2 நாட்களுக்கு முன்னர் இவ்வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போதும் கூட நடக்க முடியாமல் அந்த மூத்த தம்பதியினர் ஒரு ஆட்டோவில் நீதிமன்றத்துக்கு வந்தனர். ஆனால், கங்காராமால் ஆட்டோவில் இருந்து இறங்கி நீதிமன்ற வளாகத்திற்குள் நடந்து வர முடியவில்லை.

இது குறித்து கங்காராமின் வழக்கறிஞர் நீதிபதிக்கு தெரிவித்தார். இதனை கேட்ட நீதிபதி சாய் சிவா, அவரது இருக்கையில் இருந்து எழுந்து, நீதிமன்றத்திற்கு வெளியே ஆட்டோவில் இருந்த கங்காராமிடம் சென்று நேரில் விசாரணை நடத்தினார்.

அதன் பின்னர், இந்த வயதான தம்பதிகள் மீது எந்த தவறும் இல்லை என்றும், வேண்டுமென்றே வரதட்சணை கொடுமை வழக்கை அவர்களது மருமகள் போட்டுள்ளார் என்றும் அவரது குற்றச்சாட்டுகளுக்கு எவ்வித ஆதாரங்களும் சரிவர இல்லை என்றும் கூறி, இவ்வழக்கை தள்ளுபடி செய்தார். நீதிபதி சாய் சிவாவின் இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி, நீதிபதியின் மனிதாபிமானத்தை பொதுமக்கள் புகழ்ந்து வருகின்றனர்.


# அகமதாபாத் விமான விபத்து விசாரணைக்கு 3 மாதங்கள் அவகாசம்: மத்திய அரசு

புதுடெல்லி, ஜூன்.15-

"அகமதாபாத் விமான விபத்து குறித்த விசாரணைக்காக உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதில் உள்துறைச் செயலாளர் தலைவராக இருப்பார். இந்தக் குழு அறிக்கை சமர்ப்பிக்க மூன்று மாத காலம் அவகாசம் வழங்கப்படும்" என சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்

இது குறித்து இன்று செய்தியாளர்களை சந்தித்த சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ராம்மோகன் நாயுடு, "கடந்த இரண்டு நாட்கள் மிகவும் கடினமாக இருந்தன. குறிப்பாக அமைச்சகத்துக்கும், மற்ற அனைவருக்கும் மிகவும் கடினமான சூழல் இருந்தது. அகமதாபாத்தில் நடந்த சம்பவம் முழு நாட்டையும் உலுக்கியுள்ளது. சம்பவத்தில் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த குடும்ப உறுப்பினர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். நான் தனிப்பட்ட முறையில் என் தந்தையையும் ஒரு சாலை விபத்தில் இழந்துவிட்டேன். எனவே ஓரளவுக்கு, குடும்ப உறுப்பினர்கள் உணரும் வலியையும் வேதனையையும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.





சம்பவம் குறித்து எங்களுக்குத் தெரிந்தவுடன் அது ஓர் அதிர்ச்சியான தருணம், ஆனால், அந்த அவநம்பிக்கையிலும் கூட, என்ன செய்ய வேண்டும், என்ன ஆதரவு தேவை என்பதை மேற்பார்வையிட நான் தனிப்பட்ட முறையில் சம்பவ இடத்துக்கு விரைந்தேன். நாங்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தபோது, குஜராத் அரசு ஏற்கெனவே மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்தது.

நம்மிடம் உறுதியான பாதுகாப்புத் தரநிலைகள் உள்ளன. வலுவான நெறிமுறைகள் நாட்டில் உள்ளன. பாதுகாப்பை மேம்படுத்த நாங்கள் அனைத்தையும் செய்வோம். ஏற்கெனவே நமது பாதுகாப்பு அமைப்பு வலுவானது. விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டு அவர்களை குடும்பங்களிடம் ஒப்படைக்க டிஎன்ஏ சோதனை நடந்து வருகிறது. தற்போது கண்டெடுக்கப்பட்டுள்ள கறுப்புப் பெட்டியை டிகோட் செய்வது விபத்து குறித்த ஆழமான நுண்ணறிவை வழங்கும். கறுப்புப் பெட்டியை டிகோட் செய்வதன் மூலம் விமான விபத்துக்கு சில நிமிடங்களுக்கு முன்பு என்ன நடந்தது என்பது பற்றி அறிய முடியும்.

இந்த விமான விபத்து குறித்த விசாரணைக்காக உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதில் உள்துறைச் செயலாளர் தலைவராக இருப்பார். இந்தக் குழு அறிக்கை சமர்ப்பிக்க மூன்று மாதம் கால அவகாசம் வழங்கப்படும். அகமதாபாத் விமான விபத்தை அமைச்சகம் மிகுந்த தீவிரத்துடன் எடுத்துக்கொள்கிறது. நிலைமையை ஆய்வு செய்ய விமான விபத்து புலனாய்வுப் பணியக இயக்குநர் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்தார். விமான விபத்து குறித்த தகவல்கள் புலனாய்வுப் பிரிவால் உடனடியாகத் திரட்டப்பட்டது" என்று கூறினார்.

உயிரிழப்பு 270 ஆக அதிகரிப்பு: கடந்த வியாழக்கிழமை (ஜூன் 12) பிற்பகல் 242 பயணிகள் மற்றும் பணியாளர்களுடன் அகமதாபாத்திலிருந்து லண்டனுக்குச் சென்ற ஏர் இந்தியா விமானம் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி உட்பட 241 பேர் உயிரிழந்தனர். போயிங் 7878 விமானம் வியாழன் மதியம் 1:38 மணிக்கு புறப்பட்டது. சில நிமிடங்களுக்குப் பிறகு, அந்த விமானம் விமான நிலையத்திலிருந்து 5 கி.மீ தொலைவில் உள்ள பி.ஜே. மருத்துவக் கல்லூரி விடுதியில் விழுந்தது. இதில், கல்லூரி விடுதி வளாகத்தில் இருந்தவர்களும் உயிரிழந்தனர். இதுவரை ஒட்டுமொத்தமாக 270 உடல்கள் மீட்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கடலூர் மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை

கடலூர், ஜூன்.15-

வானிலை எச்சரிக்கை காரணமாக கடலூர் துறைமுகம் மீனவர்கள் 2 நாட்கள் கடலுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. மீன்பிடி தடைக்காலம் இன்றுடன் நிறைவடையும் நிலையில் மீனவர்கள் கடலுக்கு செல்ல தயாராக




இருந்தனர். வங்கக் கடலில் மணிக்கு 70 கி.மீ. வரை சூறாவளி காற்று வீசும் என்பதால் மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

# கனவுகள் கலைந்து சோகத்தில் மூழ்கிய குடும்பங்கள் அகமதாபாத் விமான விபத்து பெருந்துயர்

அகமதாபாத், ஜூன்.15-

அகமதாபாத்தில் நடந்த 241 உயிர்களை இழந்த பயங்கரமான விமான விபத்தில் பல குடும்பங்களின் கனவுகள் கலைந்து போயுள்ளன. குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நேற்று முன்தினம் ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளானது. இதில் பயணித்த 242 பேரில் 241 பேர் உயிரிழந்தனர். ஒருவர் மட்டுமே உயிர்பிழைத்தார். இதில் பயணம் செய்தவர்களின் கனவுகள் கலைந்து அவர்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மீள முடியாத சோகத்துக்குச் சென்றுள்ளனர். விபத்தில் ராஜஸ்தானைச் சேர்ந்த 10 பேர் இறந்தனர். அதில் 5 பேர் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.



தொழில் ரீதியாக லண்டனுக்கு குடியேற சென்ற மருத்துவர்களின் குடும்பம் இந்த விபத்தில் உயிரிழந்துள்ளது பலருக்கு கண்ணீரை வரவழைத்துள்ளது. டாக்டர் பிரதீக் ஜோஷி, அவரது மனைவி டாக்டர் கோனி வியாஸ் ஆகியோர் தங்கள் 3 குழந்தைகளான மிராயா, நகுல், பிரத்யுத் ஆகியோருடன் புதிய வாழ்க்கையைத் தொடங்குவதற்காக லண்டனுக்குப் பயணம் செய்தனர். இதில் பிரத்யுத்தும், நகுலும் 5 வயதேயான இரட்டையர்கள். மிராயாவுக்கு 8 வயதாகிறது.

அவர்கள் தொழில் முறை முன்னேற்றத்துக்காகவும், தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்துக்காகவும் இந்த முடிவை எடுத்திருந்தனர். ஆனால் நடந்து முடிந்த கோர விபத்தில் டாக்டர் பிரதீக் ஜோஷி குடும்பத்தார் அனைவரும் இறந்தது பலரை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. விமானம் புறப்படுவதற்கு முன்பு கோனி வியாஸ், பிரதீக் தங்களது குழந்தைகளுடன் செல்பி எடுத்துக்கொண்டு அதை சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளனர். ஆனால், அதுவே அவர்களது கடைசி புகைப்படமாகி விட்டது.

சிகிச்சைக்காக வந்தவர்: லண்டனைச் சேர்ந்த ரூபல் பென் படேல், தனது கணவர், 3 குழந்தைகளுடன் லண்டனில் வசித்து வந்தார். இந்நிலையில் அவர் தனது மருத்துவ சிகிச்சைக்காக குஜராத்துக்கு வந்து அவரது உறவினர் வீட்டில் தங்கியிருந்தார். சிகிச்சை முடிந்த நிலையில் அவர், லண்டன் விமானத்தில் புறப்பட்டார். ஆனால், துரதிருஷ்டவசமாக விபத்தில் சிக்கி இறந்தார். அவரை வழியனுப்ப ரூபல் பென்னின் அண்ணன், அண்ணி ஆகியோர் அகமதாபாத் வந்திருந்தனர். வழியனுப்பி விட்டு அவர்கள் ஊருக்குத் திரும்பிய பின்னர்தான் தனது தங்கை ரூபல் பென் இறந்த செய்தி அவருக்கு தெரிந்துள்ளது.

மகளைக் காணச் சென்றவர்: இதேபோல வதோதராவைச் சேர்ந்த அஞ்சு சர்மாவும் விபத்தில் இறந்தார். இவர் லண்டனில் உள்ள மூத்த மகளைக் காண லண்டனுக்கு, போயிங் 787 விமானத்தில் பயணித்து இறந்தார். அஞ்சு சர்மா இறந்துள்ளதால் அந்த கிராமமே சோகத்தில் மூழ்கியுள்ளது. அவர் இறந்த தகவல், அஞ்சுவின் வயதான பெற்றோருக்கு இன்னும் தெரிவிக்கப்படவில்லை. அஞ்சுவின் தந்தை ஜெகதீஷ் சர்மா, முன்னாள் ராணுவ வீரர். மூப்பு காரணமாக படுத்த படுக்கையாக உள்ளார். இதேபோல அவரது தாயும் உடல் நலமின்றி உள்ளார்.

இதுகுறித்து அஞ்சுவின் தங்கை நீலு சர்மா கூறும்போது, "விமானத்தில் ஏறிய பின்னர், அஞ்சு சர்மா எனக்கு வீடியோ கால் செய்தார். ஆனால் அப்போது என்னால் போனை எடுக்க முடியவில்லை. அவரை இனி பார்க்கவே முடியாது என்று எண்ணும் போது சோகம் தாங்க முடியவில்லை" என்று கூறி விட்டு உடைந்து அழுதார்.

# 10 நிமிடம் தாமதமானதால்... அகமதாபாத் விமான விபத்தில் தப்பிய இளம்பெண்

அகமதாபாத், ஜூன்.15-

விபத்துக்குள்ளான விமானத்தில் குஜராத்தின் பரூச் நகரை சேர்ந்த பூமி சவுகான் என்ற இளம்பெண் பயணிக்கவிருந்தார். ஆனால் 10 நிமிடம் தாமதமாக வந்ததால் அவரை அதிகாரிகள் உள்ளே அனுமதிக்கவில்லை.

இதுகுறித்து பூமி சவுகான் கூறுகையில், "போக்குவரத்து நெரிசலில் சிக்கிக்கொண்டதால் 10 நிமிடம் தாமதமாக விமான நிலையம் வந்தேன். பிறகு விமான நிலையத்தை விட்டு புறப்படவிருந்த நேரத்தில் விமான விபத்து பற்றி அறிந்தேன்.

எனக்கு நடுக்கம் ஏற்பட்டது. எனது கால்கள் நடுங்கத் தொடங்கின. சிறிது நேரம் செயலற்ற நிலையில் இருந்தேன். நான் வணங்கும் கணபதியின் அருளால் உயிர் தப்பினேன்'' என்றார். பூமி தனது கணவருடன் லண்டனில் வசித்து வருகிறார். இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு விடுமுறையில் இந்தியா வந்திருந்தார்.

மாலை தந்தி நாளிதழுக்கு

விருதுநகர்,திருநெல்வேலி
தென்காசி,கரூர்,சேலம்,கோவை
நாமக்கல்,திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை,
தஞ்சாவூர், நாகப்பட்டினம்,கிருஷ்ணகிரி
தர்மபுரி,திருப்பத்தூர் ,கடலூர் ராணிப்பேட்டை
ஆகிய மாவட்டங்களுக்கு மாவட்ட
செய்தியாளர்கள் மாவட்ட புகைப்பட
கலைஞர்கள் தாலுகா செய்தியாளர்கள் தேவை

95 85 32 31 32, 944 35 71 71 9

# பெரம்பூர் ரயில் நிலையம் எதிரே சாலையில் திடீர் பள்ளம்: அதிகாரிகள் ஆய்வு

பெரம்பூர், ஜூன்.15-

பெரம்பூர் ரயில் நிலையம் எதிரே உள்ள சாலையில் நேற்று காலை 8 மணியளவில் திடீர் பள்ளம் ஏற்பட்டது. 6 அடி ஆழத்திற்கு பள்ளம் ஏற்பட்டதால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது. உடனடியாக அப்பகுதி மக்கள் காவல்துறை மற்றும் மாநகராட்சி அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில், செம்பியம் போக்குவரத்து உதவி கமிஷனர் சத்தியமூர்த்தி, இன்ஸ்பெக்டர் சுடலைமணி உள்ளிட்ட போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து, தடுப்புகள் வைத்து போக்குவரத்தை சரிசெய்தனர். அந்த பகுதியில், 6 அடி ஆழத்திற்கு கீழ் மெட்ரோ வாட்டர் ராட்சத பைப்லைன் செல்வதால் உடனடியாக குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரிய அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.



அதன்படி 6வது மண்டல குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரிய பகுதி பொறியாளர் மைதிலி, பகுதி துணை பொறியாளர் சுரேஷ்குமார், மாநகராட்சி உதவி பொறியாளர் சம்பவ இடத்திற்கு வந்து ஆய்வு செய்தனர். நேற்று முன்தினம் இரவு பெய்த மழை காரணமாக மண் அரிப்பு ஏற்பட்டு சுமார் 6 அடி ஆழத்திற்கு பள்ளம் விழுந்திருக்கலாம் எனவும், பள்ளம் விழுந்த பகுதியிலிருந்து சுமார் 50 அடி தூரத்தில் மெட்ரோ ரயில் பணி நடைபெற்று வருவதால் அதனால் பாதிப்பு ஏற்பட்டதா எனவும் அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.


பின்னர், பள்ளத்தை சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. தேவைப்படும் பட்சத்தில் போக்குவரத்து மாற்றம் செய்யப்படும், என போக்குவரத்து போலீசார் தெரிவித்தனர். கனரக வாகனங்கள் மட்டும் மாதவரம் நெடுஞ்சாலை மேல்பட்டி பொன்னப்பன் தெரு, பி.பி சாலை வழியாக செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த சம்பவத்தால் பெரம்பூர் ரயில் நிலையம் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# குப்பைமேடாக மாறி வரும் வண்டலூர் காப்பு காடுகள்: பிளாஸ்டிக் கழிவுகளை விழுங்கி உயிரிழக்கும் மான்கள்

வண்டலூர், ஜூன்.15-

வண்டலூர் காப்பு காடுகளை ஒட்டிய பகுதிகளில் தொடர்ந்து கொட்டப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை உட்கொள்ளும் மான் உள்ளிட்ட வன உயிரினங்கள் பரிதாபமாக உயிரிழந்து வருகின்றன. வனப்பகுதியில் அதிகரித்து வரும் பிளாஸ்டிக் கழிவுகள், மதுபாட்டில்கள் மற்றும் குப்பைகளால் வனத்தின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி வருகிறது.

இதை தடுக்க தமிழக அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, வன உயிரின ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் பகுதியில் காப்பு காடு பகுதிகள் உள்ளன. இங்கு மான், காட்டுப்பன்றி, முயல், முள்ளம்பன்றி, மயில், நரி, ஓநாய், உடும்பு உள்ளிட்ட பல்வேறு வகையான உயிரினங்கள் வாழ்கின்றன.



இந்த காப்பு காடுகளை சுற்றியுள்ள வண்டலூர், நெடுங்குன்றம், ஊரப்பாக்கம், ஊனைமாஞ்சேரி, காரணை புதுச்சேரி போன்ற கிராம ஊராட்சிகள் தங்கள் பகுதியில் சேகரிக்கப்படும் குப்பை கழிவுகளை வனப்பகுதியை ஒட்டியுள்ள பகுதியில் கொட்டுகின்றனர். இரவு நேரங்களில் உணவு தேடி வனத்தை விட்டு வெளியே வரும் மான்கள், குப்பையில் கிடக்கும் பொருட்களை உண்டு மரணம் அடைகின்றன. இறந்து போன பல மான்களின் எச்சத்தில் பிளாஸ்டிக் கழிவுகள் கலந்திருப்பது மருத்துவ பரிசோதனையில் தெரிய வருகிறது.

குறிப்பாக, சுமார், 20க்கும் மேற்பட்ட மான்கள் கடந்த சில மாதங்களில் உயிரிழந்துள்ளன. வண்டலூர் காப்பு காடுகளின் எல்லைகளை ஒட்டிய பகுதிகள் குப்பை கழிவுகள் கொட்டும் இடமாக மாறியுள்ளன. வனப்பகுதிகள் பல இடங்களில் சமூக விரோதிகள் போட்டு செல்லும் மது பாட்டில்கள், பிளாஸ்டிக் டம்ளர்கள் நிறைந்த குப்பை மேடாக மாறி வருகின்றன. எனவே, வன விலங்குகள் நடமாடும் பகுதிகளில் கொட்டியுள்ள குப்பை குவியல்களை முற்றிலுமாக அகற்றி, இனி குப்பை கொட்டாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இதுகுறித்து வன உயிரின ஆர்வலர்கள் கூறும்போது, வண்டலூர் காப்பு காடுகளையொட்டிய பகுதிகள் முழுவதும் குப்பை கொட்டும் இடமாக மாறிக் கொண்டிருக்கிறது. பிளாஸ்டிக் கழிவுகளை வனப்பகுதியில் போடுவதால் வனத்தில் உள்ள மண் மலட்டு தன்மையாவதற்கும், அங்குள்ள பல அரிய வகையான மரங்கள் அழிந்து போவதற்கும் வாய்ப்புகள் அதிகம். குடிமகன்கள் குடித்துவிட்டு பாட்டில்களை அங்கேயே உடைத்து போடுவதால் வன விலங்குகளுக்கு ஆபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. உடைந்த பாட்டில் துண்டுகள் வனவிலங்குகளின் காலில் குத்தி, காயமடைந்து இதனால் அவற்றின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலை ஏற்படுகிறது.

இதனால் மான்கள் தொடர்ந்து இறந்து வருகின்றன. இன்னும் எத்தனை மான்களை உயிர் பலியாக தரப்போகிறோம் என்பதை குப்பை கொட்டும் ஊராட்சி நிர்வாகங்களும், வனத்துறையும், தமிழக அரசும், பொதுமக்களும் சிந்திக்க வேண்டும். பிளாஸ்டிக் கழிவுகளை கட்டுப்படுத்த மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை. பிளாஸ்டிக் குப்பைகளை முழுமையாக அப்புறப்படுத்த வனத்துறை நடவடிக்கை எடுக்கவில்லை. வனத்துறையின் தொடர் கண்காணிப்பு இருந்தால் மட்டுமே பிளாஸ்டிக் கழிவுகள் கொட்டப்படுவதை முற்றிலுமாக நிறுத்த முடியும்.

இல்லையெனில் வனம் மற்றும் வன விலங்குகளின் அழிவை யாராலும் தடுக்க முடியாது. வண்டலூர் காப்பு காடுகளை ஒட்டியுள்ள ஊராட்சிகளில் குப்பைகள் அதிக அளவில் சேகரமாகிறது. இந்த குப்பைகளை கையாள்வதில் நிர்வாக சிக்கல் ஏற்படுகிறது.

அதிக அளவில் குப்பைகள் எடுத்தால் செலவினங்கள் காண்பிப்பதில் ஊராட்சி நிர்வாகங்களுக்கு பிரச்சினை ஏற்படுகிறது. இதனால் குப்பைகளை வனப்பகுதியில் கொட்டுகின்றனர். எனவே மாவட்ட நிர்வாகம் வன வளத்தை கெடுப்போர் மீது குறைந்தபட்ச நடவடிக்கை யாவது எடுக்க வேண்டும் என, இயற்கை ஆர்வலர்கள் மற்றும் வன உயிரின பாதுகாவலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தமிழக வெற்றி கழகத் தலைவர் விஜயின் 51 வது பிறந்த நாளை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் கார்த்திக் ராஜா முகாமை தொடங்கி வைத்து ரத்ததானம் வழங்கினார்



திண்டுக்கல், ஜூன்.15-

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் உடைய 51 வது பிறந்தநாள் வருகிற 22ம் தேதி கொண்டாடப்பட உள்ளது. விஜயின் பிறந்தநாளை முன்னிட்டு திண்டுக்கல் மேற்கு மாவட்ட தமிழக வெற்றிக் கழகம் சார்பில் பழனியில் இரத்த தான முகாம் மற்றும் இலவச மருத்துவ சிகிச்சை முகாமும் நடைபெற்றது. தனியார் திருமண மண்டபத்தில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன், பழனி நகர சொயலாளர் மிதுன் தலைமையில் நடைபெற்ற முகாமில், திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் கார்த்திக் ராஜா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ரத்ததானம் வழங்கினார் முகாமில் தமிழக கழக நிர்வாகிகள். இணைச்செயலாளர் விஜய் சிவா. ஒன்றிய செயலாளர்கள். மற்றும். மணிகண்டன். பிரபு. ஆசாத். முத்து. தொண்டரணி வளசதுரை மாணவரணி சதீஷ்குமார் தகவல் தொழில்நுட்பம் சரவணவேல். வர்த்தக அணி முகமது இக்பால். மகளிர் அணி ஜெயலட்சுமி. மற்றும் தொண்டர்கள் ரத்த தானம் செய்தனர். தொடர்ந்து முகாமில் பங்கேற்ற பொதுமக்களுக்கு இலவச மருத்துவ முகாமில் பரிசோதனை செய்யப்பட்டு மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் த வெ க மாவட்ட நகர ஒன்றிய நிர்வா கிகள் மற்றும் பெண்கள் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

## மாம்பழத்திற்கு குறைந்த பட்ச ஆதார விலையும், மாம்பழ விலை வீழ்ச்சியால் ஏற்பட்டுள்ள நஷ்டத்திற்கு இழப்பீடும் கேட்டு மாம்பழங்களை கொட்டி விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

### திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம் பங்கேற்று விழசாயிகளுக்கு ஆதரவளித்தார்




திண்டுக்கல், ஜூன்.15-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ள ஆயக்குடி, கோம்பைபப்பட்டி, புளியமரத்து செட், சட்டப் பாறை, கணக்கன்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் கொய்யா மற்றும் மா ஆகியவை பிரதான விவசாயமாக உள்ளது. இப்பகுதியில் விளையும் மா, கொய்யாப் பழங்களை விற்பனை செய்ய ஆயக்குடி பேரூராட்சியில் சந்தையும் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் ஆயக்குடி பழ விற்பனை சந்தையில் இன்று மா விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மாங்காய்களை தரையில் வீசி போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து மா விளைச்சல் அதிகரித்துள்ளதாகவும், ஆனால் மாங்காய் விலை மிகவும் குறைந்து விற்பனை ஆவதாகவும் தெரிவித்தனர். எனவே மாங்காய்களுக்கு குறைந்த பட்ட ஆதரவு விலையை மாநில அரசு நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும், விலை குறைவால் நஷ்டம் ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டுமெனவும் வலியுறுத்தி விவசாயிகள் கோஷமிட்டனர். விவசாயிகள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம் விவசாயிகள் போராட்டத்தில் பங்கேற்றார். அப்போது அவர் தெரிவித்ததாவது: பழனி பகுதியில் அதிகளவில் மா விவசாயம் நடைபெறுகிறது. இங்கு விளையும் கல்லாமணி, செந்தூரம், அல்போன்சா, மல்கோவா உள்ளிட்ட நாட்டு மாம்பழங்கள் விலை மிகவும் குறைவாக விற்பனை செய்யப்படுகிறது. மாம்பழங்கள் ரகங்களை பொறுத்து ஒரு கிலோ 4ரூபாய் முதல் அதிகபட்சமாக 20ரூபாய் வரை மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது.விலை வீழ்ச்சி காரணமாக விவசாயிகள் கடும் நஷ்டத்தை சந்தித்துள்ளனர். மேலும் மாம்பழ வியாபாரிகள் அனைவரும் சின்டிகேட் அமைத்து விலையை அதிகரித்து கொடுக்காமல் கொள் முதல் செய்கின்றனர். எனவே மா விவசாயிகள் பலன் பெறும் வகையில் பழனி பகுதியில் மாம்பழக்கூல் தயாரிக்கும் நிறுவனம் அமைக்கவும், பழங்களை பாதுகாத்து வைத்து விற்பனை செய்ய குளிர்பதன கிட்டங்கியும் அமைக்க மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தார். மேலும் கடும் விலை வீழ்ச்சியால் நஷ்டமடைந்துள்ள விவசாயிகளுக்குஏக்கருக்கு ஒரு லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்ன. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்று தரையில் கொட்டி அழித்து கோஷம் எழுப்பினர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

## பல்லாவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் 4ஆண்டு கழக அரசின் சாதனைகள் விளக்க மாபெரும் பொதுக்கூட்டம்






பல்லாவரம், ஜூன்.15-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பல்லாவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடைபெற்ற முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா மற்றும் 4ஆண்டு கழக அரசின் சாதனைகள் விளக்க மாபெரும் பொதுக்கூட்டத்தில் காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநதி, தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா, தலைமை கழக பேச்சாளர்கள் கரூர் முரளி, அத்திப்பட்டு செல்வராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்வில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், பகுதி கழக செயலாளர்கள் இ.எஸ்.பெர்னார்ட், ஏ.கே. கருணாகரன்,பொதுக்குழு உறுப்பினர் மு.ரஞ்சன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ.ஜானகிராமன் பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட மாநகர பிரதிநிதிகள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட மாநகர பகுதி அணிகளின் நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் பங்கேற்றனர்.

## தாம்பரத்தில் படை தலைவன் திரைபடம் வெளியானதை யொட்டி தேமுதிக வினர் கேக் வெட்டி இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்



தாம்பரம், ஜூன்.15-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் மகன் சண்முக பாண்டியன் ஹீரோவாக நடித்துள்ள படை தலைவன் திரைபடம் தாம்பரம் எம்.ஆர் திரை அரங்கில் வெளியானதை யொட்டி தாம்பரம் மாநகர மேற்கு பகுதி சார்பில் ஏற்பாட்டில் பகுதி செயலாளர் மார்கெட் ஞானபால் தலைமையில், தெற்கு பகுதி செயலாளர் கேட் எம்.தர்மா, மத்திய பகுதி செயலாளர் என்.ஆர். ஆனந்தன் ஆகியோரின் முன்னிலையில் விழாவில் செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் அனகை முருகேசன், மாவட்ட துணை செயலாளர் மா.செழியன் ஆகியோர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் திருவுருவ படத்திற்க்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். அதனை தொடர்ந்து தாம்பரம் மாநகர தெற்கு பகுதி ஏற்பாட்டில் படத்தை கான வந்த சிறுபிள்ளைகளுக்கு நோட் புத்தகம், பென்சில், பேனா பொருட்கள் வழங்கப்பட்டது. படை தலைவன் திரைபடம் வெளியான யொட்டி தாம்பரம் மாநகர தேமுதிக சார்பில் பட்டாசுகள் வெடித்து, கேக் வெட்டி இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். அதனை தொடர்ந்து படை தலைவன் திரைபடம் முதல் காட்சியை கான சென்றனர். இதில் ஏராள்மான தேமுதிக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர். கேப்டன் விஜயகாந்த் அவர்களின் நடித்த திரைபடம் வெளியாகும் போதெல்லாம் பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்கி சிறப்பிப்பது குறிப்பிடதக்கது.



## திருநங்கைகள் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை பெறுவதற்கு ஏதுவாக, வருகின்ற 24.06.2025 அன்று திருநங்கைகளுக்கான ஒரு நாள் சிறப்பு முகாம்

### மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் தகவல்

சிவகங்கை, ஜூன்.15-

சமூகத்தில் விளிம்பு நிலையில் உள்ள திருநங்கைகளுக்கு ஒரே இடத்தில் ஒரே நாளில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் பொருட்டு சிவகங்கை மாவட்ட சமூக நலத்துறை மற்றும் இதர நலத்திட்ட சேவைகள் வழங்கும் துறைகளின் சார்பில், வருகின்ற 24.06.2025 அன்று சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டரங்கில் திருநங்கைகளுக்கான ஒரு நாள் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது.

இம்முகாமில் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கைகள் திருநங்கையர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை, முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டை மற்றும் ஆயுஷ்மான் பாரத் அட்டை ஆகிய நலத்திட்ட சேவைகளைப் பெற உரிய சான்றாவணங்களுடன் கலந்துகொண்டு பயன்பெறலாம்.


மேலும், இம்முகாம் தொடர்பான கூடுதல் விபரங்களுக்கு 04575 240426 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.



■ மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முதன்மை நீதியரசர் திரு.கே.ஆர்.ஸ்ரீராம் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் குடும்ப நல நீதிமன்றத்தை துவக்கி வைத்த நிகழ்வில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டார்கள்



■ தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், வருகின்ற ஜூலை முதல் வாரம் பன்னோக்கு உயர் சிகிச்சை மருத்துவ முகாம் நடத்துவது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.தி.புவனேஷ் ராம், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட சுகாதார அலுவலர்கள் மரு.யாழினி அவர்கள் (தூத்துக்குடி), மரு.வித்யா அவர்கள் (கோவில்பட்டி), துணை இயக்குநர்கள், இந்திய மருத்துவ சங்கத்தின் மாவட்ட பிரதிநிதி, இந்திய குழந்தைகள் மருத்துவ சங்கத்தின் மாவட்ட பிரதிநிதி, தென்னிந்திய மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவ சங்க கூட்டமைப்பின் பிரதிநிதி, வட்டார மருத்துவ அலுவலர்கள், பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




## உலக இரத்த கொடையாளர் தின விழா மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தலைமையில் நடைபெற்றது

கன்னியாகுமரி, ஜூன்.15-

கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற உலக இரத்த கொடையாளர் தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, கலந்து கொண்டு, அதிக முறை ரத்தம் தானம் செய்தவர்ளுக்கு பதக்கங்கள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி, பேசுகையில்

கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிக அளவில் இரத்த கொடையாளர்கள் கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் பல்வேறு தரப்பட்ட மக்கள் தானாக முன்வந்து இரத்தம் வழங்கி வருகிறார்கள். அரசு மருத்துவமனைகளில் கர்ப்பிணி பெண்களுக்கும் இரத்த சோகையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அதிக அளவு இரத்தம் தேவைப்படுகிறது. இரத்த வங்கிகளில் தேவையான இரத்தத்தினை இருப்பு வைத்து கொள்ள வேண்டும். அதிக அளவு இரத்தம் தேவைப்படும் நேரங்களில் இரத்த கொடையாளர்கள், தன்னார்வலர்கள் கல்லூரி மாணவ மாணவியர்களிடம் பெற்று உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்க வேண்டும். இரத்த கொடையாளர் களும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை தொடர்ந்து இரத்தம் வழங்குவதன் மூலம் பல உயிர் களை காப்பாற்ற முடியும். எனவே பொதுமக்கள் தன்னார்வமாக இரத்த தானம் செய்திட முன்வர வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, பேசினார்கள். நடைபெற்ற விழாவில் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.இராமலட்சுமி, மருத்துவ கண்காணிப்பாளர் மரு.கிங்ஸ்லி ஜெபசி, இணை இயக்குனர் குடும்ப நலம் மரு.ரவிக்குமார் துணை முதல்வர்.மரு.சுரேஷ் பாலன், உறைவிட மருத்துவர்வர்கள் மரு.விஜயலட்சுமி, மரு.ரெனிமோள், இரத்த வங்கி மருத்துவர் மரு.ராகேஷ் துறை அலுவலர்கள், பொதுமக்கள், இரத்த கொடையாளர்கள், கல்லூரி மாணவ மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161